இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 326 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆனி 22 – ஞாயிற்றுக்கிழமை 06 ஜூலை 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 326 : Thiruvalluvar Year - 2056 - Aani 22 - Sunday 06 July 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.7.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் 103 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 முதன்மை பதப்படுத்தும் மையங்கள், 18 சேமிப்புக் கிடங்குகள், 3 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 3 வேளாண் சந்தை நுண்ணறிவு ஆலோசனை மையங்கள், 8 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள், 10 துணை வேளாண் விரிவாக்க மையங்கள், 2 விதை சேமிப்புக் கிடங்குகள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், 2 ஒருங்கிணைந்த விதைச்சான்று வளாகங்கள், அலுவலகக் கட்டடம், மாணவர் விடுதி மற்றும் தரக்கட்டுப்பாடு/ பகுப்பாய்வகம் உள்ளிட்ட 52 கட்டடங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வேளாண்மை – உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் த.ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலைத் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன், வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் முனைவர் இரா. முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.7.2025) தலைமைச் செயலகத்தில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 10.57 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் விடுதியினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.103.38 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண் கட்டடங்கள் திறப்பு!

# ‘ஊட்டச் சத்து வேளாண்மை இயக்கம்’; புதிய திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் தொடங்கி வைத்தார் !

**சென்னை, ஜூலை 6 –**

**“ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, ரூ.103.38 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 52 வேளாண் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.7.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் **“ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்”** என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, 5 பயனாளிகளுக்கு **காய்கறி விதைத்தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள் மற்றும் பயறு வகைத் தொகுப்புகளை வழங்கினார்.** மேலும், 103 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 முதன்மை பதப்படுத்தும் மையங்கள், 18 சேமிப்புக் கிடங்குகள், 3 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 3 வேளாண் சந்தை நுண்ணறிவு ஆலோசனை மையங்கள்,

8 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள், 10 துணை வேளாண் விரிவாக்க மையங்கள், 2 விதை சேமிப்புக் கிடங்குகள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், 2 ஒருங்கிணைந்த விதைச்சான்று வளாகங்கள், அலுவலகக் கட்டடம், மாணவர் விடுதி மற்றும் தரக்கட்டுப்பாடு/ பகுப்பாய்வகம் உள்ளிட்ட 52 கட்டடங்களை திறந்து வைத்தார்.

வேளாண்மைத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் வேளாண்மைத் துறைக்கென 5 தனி நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்து, ரூ.1,94,076 கோடியில் பல்வேறு நலத்திட்டங்கள், உழவர்களின் நலனை பேணும் வகையில் வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை – உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண் பெருமக்களின் வருவாயினை உயர்த்திட கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்திட முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், விவசாயிகள் தங்கள் விளை நிலங்களின் மண்வளத்தினை அறிந்திட தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

**“ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தல்**

ஊட்டச்சத்துகளை அளிப்பதில் காய்கறிகள், பழங்கள், பயறுவகைகள், சிறு தானியங்கள் பெரும்பங்காற்றுகின்றன. ஊட்டச்சத்து வழங்கும் இந்த விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரித்து ஊட்டச்சத்துப் பாதுகாப்பினை உறுதி செய்வதுடன், உழவர்களின் வருமானத்தை உயர்த்தும் வகையில் “ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்” என்னும் புதிய திட்டம் 18 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும் என்று 2025 - 26 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை – உழவர் நலத்துறை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தின் கீழ், மக்களின் அன்றாட காய்கறித் தேவைகளை நிறைவு செய்யவும், வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாகவும் தக்காளி, கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள் போன்ற காய்கறி விதைகள் அடங்கிய 15 இலட்சம் காய்கறி விதைத் தொகுப்புகள், விரைவில் பலனளிக்கும் பப்பாளி, கொய்யா, எலுமிச்சை ஆகிய பழச்செடிகள் அடங்கிய 9 இலட்சம் பழச்செடி தொகுப்புகள் மற்றும் புரதச்சத்து நிறைந்த மரத்துவரை, காராமணி உள்ளிட்ட பயறு வகைகள் அடங்கிய ஒரு இலட்சம் பயறு வகை விதைத் தொகுப்புகள் ஆகியவற்றை விவசாய பெருமக்களுக்கு வழங்கும் வகையில், 5 பயனாளிகளுக்கு காய்கறி விதைத் தொகுப்புகள், பழச்செடித் தொகுப்புகள் மற்றும் பயறு வகைத் தொகுப்புகளை வழங்கி, இப்புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

**திறந்து வைக்கப்பட்ட புதிய வேளாண் கட்டடங்களின் விவரங்கள்**

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில் திருவண்ணாமலை மாவட்டம் குப்பநத்தம் மற்றும் படவேடு ஆகிய இடங்களில் 8 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் 2 முதன்மை பதப்படுத்தும் மையங்கள்;

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில், பாவூர் சத்திரம், தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை, விளாத்திகுளம், ஸ்ரீவைகுண்டம், கரூர் மாவட்டம் கரூர், அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம், காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர், சுங்குவார்சத்திரம், திருப்பத்தூர் மாவட்டம் – திருப்பத்தூர், வேலூர் மாவட்டம் – குடியாத்தம் ஆகிய மாவட்டங்களில் 28 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 14 சேமிப்பு கிடங்குகள்;

கோயம்புத்தூர் மாவட்டம் - ஆனைமலை, நேகமம், காரமடை, மலையடிப்பாளையம் ஆகிய இடங்களில் விற்பனைக் கூட நிதியிலிருந்து 8 கோடி ரூபாய் செலவில் 1000 மெ.டன். கொள்ளளவு கொண்ட 4 கிடங்குகள்;

தென்காசி மாவட்டம் ஆலங்குளம், திருவண்ணாமலை மாவட்டம் ஆதமங்கலபுதூர் மற்றும் நாயுடுமங்கலம் ஆகிய இடங்களில் 14 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் 3 வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்;

செங்கல்பட்டு, திருப்பத்தூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் 2 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் 3 வேளாண் சந்தை நுண்ணறிவு ஆலோசனை மையங்கள்;

அரியலூர் மாவட்டம் – தா.பழூர், வேலூர் மாவட்டம் வேலூர், புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி, கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர், திருவண்ணாமலை மாவட்டம் - வந்தவாசி, கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் ஆகிய மாவட்டங்களில் 22 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் 8 ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம் – பழந்தண்டலம், களக்காட்டூர், தேனி மாவட்டம் தேவதானப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் அணைக்கரை, திருச்சிற்றம்பலம், சேதுபாவாசத்திரம், திருப்பூர் மாவட்டம் கோவிந்தாபுரம், அரியலூர் மாவட்டம் விக்கிரமங்கலம், தென்காசி மாவட்டம் - அச்சன்புதூர், புதுக்கோட்டை மாவட்டம் – கீரமங்கலம் ஆகிய இடங்களில் 5 கோடி ரூபாய் செலவில் 10 துணை வேளாண் விரிவாக்க மையங்கள்;

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# உச்சநீதிமன்றம் தமிழ்நாடு ஆளுநருக்கு நோட்டீஸ் !

## துணைவேந்தர்கள் நியமனச் சட்ட வழக்கில் 4 வாரங்களில் பதிலளித்திட வேண்டும்!

புதுடெல்லி, ஜூலை 6 –

துணைவேந்தர்கள் நியமன சட்ட வழக்கில் 4 வாரத்தில் பதிலளிக்குமாறு தமிழ்நாடு ஆளுநர், ஒன்றிய அரசு உள்ளிட்டோருக்கு நோட்டீஸ் அனுப்பி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி மசோதாக்களுக்கு அனுமதி வழங்காததை தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்தது. ஆளுநர் காலதாமதத்தை குறிப்பிட்டு உச்சநீதிமன்றம் தனது தனி அதிகாரத்தை பயன்படுத்தி 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்து உத்தரவு பிறப்பித்தது. இதனைத் தொடர்ந்து, அவற்றை தமிழ்நாடு அரசு சட்டமாக அரசிதழில் வெளியிட்டது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை அவசர, அவசரமாக விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் கடந்த மே மாதம் இடைக்கால தடை விதித்தது.

இதையடுத்து, உயர்நீதிமன்றத்தின் இடைக்கால தடையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மேல்முறையீட்டு மனுத்தாக்கல் செய்தது.

அந்த மனுவில், கடந்த 2 ஆண்டுகளாக ஆளுநர் நடவடிக்கை எடுக்காததால், துணைவேந்தர்கள் நியமிக்கப்படாமல் உள்ளது. உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மூலம் அதற்கு விடிவு ஏற்பட்டதை மனுவில் தமிழ்நாடு அரசு சுட்டிக்காட்டியுள்ளது. இந்த சட்டங்கள் தொடர்பான வழக்கு ஏற்கனவே உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் உயர்நீதிமன்றம் இதற்கு தடை விதித்தது தவறானது என்று மனுவில் தமிழ்நாடு அரசு கூறியுள்ளது.

எனவே கடந்த 21ம் தேதி சென்னை உயர்நீதிமன்றம் விதித்த இடைக்கால உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு மனுவில் கூறியுள்ளது. இந்நிலையில், இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, மகாதேவன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் பி.வில்சன், அபிஷேக் சிங்வி ஆகியோர் தங்கள் தரப்பு வாதத்தை முன்வைத்தனர். உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக அபிஷேக் சிங்வி தனது வாதத்தை முன்வைத்தார்.

இதேபோன்று, சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குக்கு தடை விதிக்க வேண்டும் என்று வில்சனும் குறிப்பிட்டார். அப்போது, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு தடைவிதிப்பது குறித்து அடுத்த விசாரணையின் போது முடிவு செய்யலாம் என்று நீதிபதிகள் கூறினர். இதையடுத்து, அனைத்து தரப்பு வாதங்களையும் பதிவு செய்த நீதிபதிகள், 4 வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, ஒன்றிய அரசு, யூ.ஜி.சி. உள்ளிட்டோருக்கு நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டனர்.

# விவசாயிகள் கடனில் மூழ்கும்போது மகாராஷ்டிரா அரசு அலட்சியம்!

## மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி குற்றச்சாட்டு !



*புதுடெல்லி, ஜூலை 6 -*

*விவசாயிகள் கடனில் மூழ்கும் போதும் மகாராஷ்டிரா அரசு அலட்சியமாக இருப்பதாக, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.*

*மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், விவசாயிகளின் கடன் தள்ளுபடி மற்றும் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கோரிக்கையை ஒன்றிய அரசு புறக்கணித்ததால், மகாராஷ்டிராவில் மூன்று மாதங்களில் 767 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது வெறும் புள்ளி விவரமா? இல்லை. 767 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. 767 குடும்பங்களால் ஒரு போதும் மீள முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*அரசாங்கமோ அமைதியாக இருக்கிறது. அது அலட்சியமாக பார்த்துக் கொண்டு இருக்கிறது. விதை, உரம் மற்றும் டீசல் விலை அதிகமாக இருப்பதால் விவசாயிகள் ஒவ்வொரு நாளும் கடனில் மூழ்கி வருகின்றனர். ஆனால் குறைந்தபட்ச ஆதரவுக்கு எந்த உத்தரவாதமும் இல்லை.*

*கடன் தள்ளுபடி கோரும்போது அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆனால் கோடிக் கணக்கில் கடன் வைத்திருப்பவர்களின் கடன்களை மோடி அரசு எளிதாக தள்ளுபடி செய்கிறது என்று கூறியுள்ளார்.*

*மேலும், தொழிலதிபர் அனில் அம்பானி 48 ஆயிரம் கோடி ரூபாய் வங்கி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக நாளிதழ்களில் வெளியான செய்தியையும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.*